**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 96/2019

**02.12.2025.**

**DW- 1**

**பி.வா.சா.1 சூரஜ்குமார் த/பெ. ராஜசேகரன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-**

பொது அதிகார ஆவணம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 28.06.2018 , கிரய பத்திரம் 04.07.2018 ல் ஏற்பட்டது. இடையில் எத்தனை நாட்கள் உள்ளது என்றால் 7 நாட்கள். 28.06.2018 ல் சித்ராவை மோசடியாக சீனிவாசன் பவர் பத்திரம் எழுதிவாங்கியதால் உடனடியாக சித்ரா 29.06.2018 ல் ஒரு அறிவிப்பை சீனிவாசனுக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பை சீனிவாசன் 02.07.2018 ல் வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. சாட்சி அஞ்சல் அட்டையில் அஞ்சலக சீல் தெளிவாக இல்லை light ஆக இருக்கிறது என்றும் அது மோசடியாக தயார் செய்தது என்றும் கூறுகிறார். அறிவிப்பிற்குண்டான ரசீதும் இல்லை என்கிறார். சீனிவாசன் முதல் தெருவில் வசிக்கிறார். சீனிவாசன் 15 சிங்காரவேலு தெருவில் வசித்து வருகிறார் என்றால் இல்லை. வெங்கடேஷ் மாமா என்பவர் தான் சிங்காரவேலு தெருவில் வசித்து வருகிறார். என் பெயரில் உள்ள கிரய பத்திரத்தில் சீனிவாசன் சிங்காரவேலு தெருவில் வசித்து வருகிறார் என்று உள்ளது என்றால் சரிதான். கம்மாள தெரு மன்னார்குடியில் நகைகடைகள் அதிகம் உள்ள தெரு என்றால் சரிதான். அங்கு ஒரு சதுர அடி வழக்கு தேதியில் 1 சதுர அடி எவ்வளவு ரூபாய்க்கு சென்றது என்றால் தெரியாது. 2018 ம் ஆண்டு கம்மாள தெருவில் 1 சதுர அடி ரூ. 3500 வரை சென்றது என்றால் அதுபற்றி தெரியாது. என் தகப்பனார் எனக்காக கிரயம் வாங்கியபோது 1 சதுர அடி என்ன விலைக்கு பேசப்பட்டது என்று எனக்கு தெரியாது. மொத்தமாக ரூபாய் கொடுத்தோம். மொத்த சதுர அடி 249 ஆகும். அது தரைதளம் மற்றும் முதல் மாடியுள்ள கடைகட்டிடமாகும். முதல் மாடிதளத்திற்கு சதுர அடி எவ்வளவு போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. வழக்கிற்கு நான் ஆஜரானபின்பு சதுர அடி எவ்வளவிற்கு சென்றது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என்னுடைய பத்திரத்தில் சதுர அடி எவ்வளவு ரூபாய்க்கு போடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. பவர் பத்திரம் எழுதியவுடன் 7 நாட்களில் அவசரஅவசரமாக பத்திரம் எழுதிக்கொடுத்துள்ள நிலையில் சித்ராவிடம் நான் நீங்கள் பவர் எழுதிக்கொடுத்தது உண்மையா என்று கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை என் அப்பா கேட்டார். என் அப்பா அதை என்னிடம் சொன்னார். அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. சொத்து கிரயம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று எடுத்துப்பார்த்தோமா என்றால் நினைவில்லை. EC போட்டுப்பார்த்ததாக சாட்சி கூறுகிறார். உண்மையில் அவ்வாறு EC எடுத்திருந்தால் எங்களுடைய வழக்கு நியாயமான வழக்கு என்று நிருபிக்கமுடியும் என்றாலும் அவ்வாறு நாங்கள் எந்த வில்லங்க சான்றும் எடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக வில்லங்க சான்று பார்த்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா மற்றும் அப்பாவின் சகோதரி அப்பாவின் அப்பாவிற்கிடையே இந்த நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த அசல் வழக்கின் எண் நினைவில்லை. அந்த அசல் வழக்கின் எண் 38/2013 என் தகப்பனார், என் தாத்தா மீதும் சகோதரியின் மீதும் தாக்கல்

செய்தார் என்றால் அதுபற்றி நினைவில்லை. வழக்கு நிலுவையில் இருந்ததால் என்னுடைய அத்தை சித்ராவுக்கும் என் அப்பாவிற்குமிடையே சுமுகமான பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. என் அத்ததை மகளின் சடங்கு நிகழ்ச்சிக்கு சென்று வந்தோம் நல்ல பேச்சுவார்த்தை இருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்குமுன்பிருந்தே என் அப்பாவிற்கும் தாத்தா மற்றும் அத்தைக்குமிடையே சுமுகமான பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. அத்தை மகளின் சடங்கிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா 10 பவுன் நகை சடங்கிற்கு செய்தார். சடங்கு நடந்த தேதி ஞாபகமில்லை. 10 பவுன் நகை வாங்கிய தேதி நினைவில்லை. நகை போட்டதை நான் பார்த்தேன். எங்களுக்கும் வாதிக்குமிடையே சுமுகமான உறவு இல்லாத நிலையில் 10 பவுன் நகை போட்டது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 138/2018 வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் அதை நாங்கள் மேல்நடத்தவில்லை. அந்த வழக்கு உண்மைக்கு புறம்பாக போடப்பட்டது என்பதால் அதை நாங்கள் மேல்நடத்தவில்லை என்றால் சரியல்ல. எங்கள் எதிர்வழக்குரையில் சொத்தை சரியாக மறுபயன்கொடுத்துதான் சொத்தை கிரயம் வாங்கினோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சீனிவாசனுக்கு கிரய தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சீனிவாசனுக்கு தொகை கொடுக்காததால் சீனிவாசன் சித்ராவிற்கும் தொகை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பவர்பத்திரமானது என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அது வா.சா.ஆ. 15 ஆகும் ( மேற்படி ஆவணம் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணமாகும் ) வா.சா.ஆ. 15 ல் நேரம் 6.27 என்று போடப்பட்டுள்ளது என்றால் சாட்சி சரியாக தெரியவில்லை என்கிறார். சாட்சி 6.00 மணி என்று உள்ளது அதன்பிறகு வரும் நிமிடம் தெரியவில்லை என்கிறார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சித்ராவிற்கு கடன் இருந்ததால் சொத்தை விற்க முயற்ச்சி செய்து வந்தார் என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கும் சித்ராவிற்கும் விரோதம் இருந்த நிலையில் சொத்தை விற்பதற்காக சித்ரா என்னடைய தாயாரை பார்த்தாக எதிர்வழக்குரையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பனாரும் சீனிவாசனும் ஒன்றுசேர்ந்து மோசடியான எண்ணத்துடன் பவர்பத்திரத்தையும் கிரயபத்திரத்தையும் தயார் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பட்டா மாற்றம் செய்யகூடாது என்று தாசில்தார் மற்றும் வருவாய் துறையினருக்கு சித்ரா அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. பட்டா என் பெயரில் தான் உள்ளது. எனக்காக என் தகப்பனாருக்கு மேற்சொன்னவாரு சித்ரா அனுப்பிய அறிவிப்பை என் தகப்பனாரும் பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. எண் 78 பெரியகம்மாள தெரு எங்கள் முகவரி தான். அந்த அறிவிப்பை என் தகப்பனார் வாங்கினார் என்றால் சாட்சி தற்போது அறிவிப்பை என் தகப்பனார் வாங்கியதாக கூறுகிறார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது அவசர அவசரமாக பட்டா மாற்றவேண்டிய அவசியம் என்னவென்றால் பத்திரபதிவன்றே அதற்கான விண்ணப்பம் கொடுக்கப்பட்டது அதனால் பட்டா மாற்றப்பட்டது. பத்திரபதிவன்றே பட்டா மாற்றுவதற்கான எந்த நடவடிக்கையும் என்றாலும் மனுதாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என் தாத்தா சொத்தையும் மற்றோரு அத்தை லதா என்பவரின் சொத்தையும் அபகரிக்க முயற்ச்சி செய்தது போலவே இந்த வழக்கையும் நானும் சீனிவாசனும் சேர்ந்து பொய்யாக பத்திரம்

ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. குடும்ப சொத்துகள் வெளியில் செல்லகூடாது என்பதற்காக எங்களிடம் கிரயம் கொடுத்தார்கள். கிரய பத்திரத்தில் அவ்வாறு வாசகங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி விபரங்கள் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பவர்பத்திரம் ரத்து செய்த விபரம் சீனிவாசனுக்கும் என் தகப்பனாருக்கும் தெரியும் என்றாலும் அது தெரிந்தும் பத்திரம் பொய்யாக என் பெயருக்கு பதிவு செய்யப்பட்டடுள்ளது என்றால் சரியல்ல. அறிவிப்பே அனுப்பவில்லை அது மோசடியாக தயார் செய்யப்பட்டது. மேற்படி மோசடி என்ற விபரத்தை யார் சொல்லவேண்டும் என்றால் சீனிவாசன் தான் சொல்லவேண்டும் என்றும் நான் கூறமுடியாது என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள கிரயபத்திரம் மோசடியானது என்பதால் தான் சித்ரா அவர் பெயரில் வாங்கிய கிரயபத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் சித்ரா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் மோசடி என்பதால் தான் என் பெயருக்கு ஏற்பட்ட 04.07.2018 ஆவண எண் 2880/2018 கிரயபத்திரத்தை ரத்து செய்ய வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தற்போதுவரை பவர் நிலுவையில் உள்ளது. பொது அதிகாரபத்திரம் கொடுத்தவர் ஒப்பந்த சட்டம்படி ஒரு அறிவிப்பு அனுப்பி அந்த பவர் பத்திரத்தை அவர் ரத்து செய்யமுடியும் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் அவசரமாக எழுதப்பட்ட பவர் பத்திரத்தை ரத்து செய்ய சித்ரா அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.